# விடியல்

The Dawn

இதழ்-114, அக்டோபர்-2018



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**

கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா.சுரேஷ்**

தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**முனைவர் ப.பிரதீபா**

தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**

திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
முனைவர் ந.சங்கீதா
திரு. செ.தங்கராஜ்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா
முனைவர் ம.சுரேஷ்
திரு க.தனபால்
திருமதி ல.வெண்ணிலா
திரு.வி.சந்திரன்


## சிதையும் குடும்ப அமைப்பு

உலக நாடுகளில் இந்தியா தனித்துவம் பெற்றது. இதற்குக் காரணம் இந்தியாவின் குடும்ப அமைப்புகள் என்றே கூறலாம். தனிமனித ஒழுக்கத்தைப் போதிப்பது குடும்பங்கள். பொதுவெளியில் சமூக மதிப்பீடுகளில் ஒரு தனிமனிதனின் அந்தஸ்தினை பணம் மட்டுமல்லாது குடும்ப முறைகளும் நிலை நிறுத்துகின்றன. பண்டைய காலம் முதல் இக்காலம் வரை நிலையான அமைப்பாக குடும்பங்கள் விளங்குகின்றன. இருப்பினும் சமீப காலமாக குடும்ப அமைப்புகள் சிக்கல் பல நிறைந்ததாகவும், தன்னலம் மிக்கதாகவும் திகழ்கின்றன. இச்சூழல் ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டமைக்க இயலாத நிலைக்குக் கொண்டு செல்லும் என்பது திண்ணம்.


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA Knowledge is Power



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher

இன்றைய சமூகத்தில் வரன்முறையின்றி திணிக்கப்படும் கல்வி, வேலைப்பளு, பணியிடங்களில் கொடுக்கப்படும் அழுத்தம், எதிர்பார்ப்பு நிறைவேறாமை, தன் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் உறவுகள் கிடைக்கப்பெறாமை ஆகிய காரணங்களால் தனிமனிதனின் மனதில் நிலையான வெற்றிடம் ஏற்படுகிறது. இந்நிலையே நீடிக்கும் பொழுது பொறாமைக் குணம் மிக்கவர்களாகவும், அதீத சுயநலவாதிகளாகவும் மாற வழிவகுக்கிறது. தனக்கு ஒரு பொருள் கிடைக்க வேண்டுமெனில் அதனால் பிறர் அடையும் பாதிப்புகளை கவனத்தில் கொள்ளாது எந்த நிலையாயினும் அப்பொருளைப் பெறுவதிலேயே முழு முயற்சியோடு ஈடுபடும் செயல்களால் குடும்பங்கள் சிதைகின்றன.

சமீப காலமாக நாளிதழ்களில் மகள் காதலுக்காக தன் தாயைக் கொலை செய்வதும், ஆறு மாதங்கள் கூட நிறைவடையாத பச்சிளம் குழந்தையைத் தாய் தூக்கி வீசுவது, கொலை செய்வது போன்ற செய்திகளே இடம் பெறுகின்றன. இச்செய்திகள் சமூகத்தில் குடும்ப உறவுகள் எதனை நோக்கிப் பயணிக்கின்றன எனும் பயத்தை நம்முள் விதைக்கின்றன.

தன் தாய்நாட்டை நேசிப்பதே தன்னலம் எனக் கருதிய மனப்பாங்கு மாறித் தன் சுயத்தை மட்டுமே சிந்திக்கும் அளவுக்கு மனநிலை குன்றியிருப்பது சாபக்கேடேயாம். நம் முன்னோர் தன் சுயம் மட்டுமே கருதியிருப்பாராயின் ஆங்கிலேயரிடமிருந்து நம் நாட்டை மீட்டிருக்க இயலாது. நாட்டைக் காக்கும் தியாகிகளாக இல்லாவிடினும் குறைந்தபட்சம் குடும்ப உறவுகளை நேசிப்பவர்களாக, குடும்பத்திற்காகத் தன் தேவைகளை இரண்டாம் நிலையில் நோக்கும் தியாகிகளாக இருப்பின் நலம். குடும்பங்கள் சிதையாது உறவுகள் பிணைந்து குடும்பம் செழிப்படையும். சமூகத்தில் நம் மதிப்பு உயர்வது கண்கூடாகத் தெரியும்.

குடும்பம் எனும் பாசப்பிணைப்பு மிகுதியாகக் கொண்டிருப்பது நம்நாடு. இந்நிலையை தனி மனித சுயநலம் எனும் போர்வாள் கொண்டு சிதைக்காது பேணிக்காப்பது நம் கடமை. கல்வி, வேலை(பணி) போன்ற காரணங்களால் குடும்பத்தை விட்டு எப்போதும் விலகியே இருப்பதும் குடும்ப உறவுகளுக்குள் பிணைப்பு, பாசம் குறைய காரணமாகின்றன. இந்நிலையே தொடருமாயின் அடுத்த மூன்றாவது தலைமுறையினருக்கும் முதல் தலைமுறையிருக்கும் தொடர்பே இல்லாத நிலை ஏற்படும். அந்நிலையில் குடும்ப அமைப்பில் விரிசல் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாத நிலை உண்டாகும். இதனைத் தவிர்க்க குடும்ப உறவுகளின் அவசியத்தை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்வதும், சொல்வதும் நம் அனைவரின் கடமை. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று உணர வேண்டும், உணர்த்த வேண்டும்.

- இணையாசிரியர்



## சிதையும் குடும்ப அமைப்பு

கவிதைகள்........................5 - 17

விகடகவி தெனாலிராமன்........17 - 18

படிப்புகள்..........................18 - 19

ஊரும் உற்பத்தியும்..............19 - 20

சிறுகதை..........................20 - 23

பெரியாரின் பெண் விடுதலைச்
சிந்தனைகள்.....................23 - 26

பொது அறிவு வினா- விடை.....26 - 29

கவிதைகள்........................29 - 32

# கவிதைகள்

## இயற்கை

இயற்கையின் காதல்
சலனமற்று நின்று
அழகாய் படம் பிடித்து
பதுக்கிக் கொண்டாயே உன்னுள்!
யாரேனும் கவர்ந்திடுவரோ
என்ற பயமோ…..
கண்ணேறு பட்டுவிடுமோ
என்ற ஆதங்கமோ……?

கோ.கோகுல்ராஜ்
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## பிரிவு

பிரிவு என்பது
நிரந்தரமானது
இல்லை
அதைப் புரிந்து கொண்டவர்கள்
யாரும் இங்கில்லை
ஒவ்வொருவரிடமிருந்து
பிரியும் பிரிவும்தான்
நாம் முன்னோக்கிச் செல்லப்
பாதைகளாய் அமைகின்றது

நண்பனின் பிரிவுதான்
அமைதியைத் தந்தது
ஆசிரியரின் பிரிவுதான்
அறிவைத் தந்தது
பெற்றோரின் பிரிவு
அனுபவத்தைத் தந்தது
பிரிவுகளில் துயரமான நாட்கள்
இருப்பதை விட
நண்பனுடன் இருந்த நாட்களை
நினைத்துப் பார்த்தால்
பிரிவு என்ற ஒன்றே இல்லை
என தோன்றியது
சண்டையிட்ட நாட்களையும்
இன்பமான நாட்களையும்
கொடுத்தது இந்தப் பிரிவே
தோல்வியின் பிரிவுதான்
வெற்றியைத் தரும்
ஒரு மரத்தில் இருக்கும்
விதையின் பிரிவுதான்
நாளை புதிய மரங்களை
உருவாக்கும்
ஒரு திங்களில்
நிலாவின் பிரிவுதான்
வானின் அழகைக் குறைக்கும்
மழையின் பிரிவுதான்
அழகான வானவில்லைக் கொடுக்கும்
பிரிவு என்பது

வருத்தமானது ஒன்றுமில்லை
அது ஒரு அழகான அனுபவம்

இரா. தீபா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## குழந்தையின் சிரிப்பில்

புன்னகை நனைத்த பூவே
உன் சிரிப்பில்
நனைத்த அழகை
உன் பிஞ்சு கைவிரல்
தொட ஆசை
அழகான கால்விரல்
தொட ஆசை
பட்டாம்பூச்சி இமைகள்
பக்கம் வந்தேன்
பிஞ்சு கால்களில் உதைத்தாய்
உதைத்துவிட்டு பிஞ்சு
கைகளால் கைதட்டி
உன் சிரிப்பில்
நனைத்தாய்
என் கைகளால்
உனக்கு உணவு
ஊட்டி இரசித்தேன்
உன் சின்னஞ்சிறு
கைகளில் துள்ளி
விளையாடிய கைப்பந்தாக

இன்று உனக்காக
நான் மாறினேன்
தட்டி தாளங்கள் போட்ட உன்
கைத்தட்டல் அழகு
சின்னஞ்சிறு அழுகை அழகு
கிள்ளிவிட்டு
தொட்டிலையும் ஆட்டி
உன் அழுகையை இரசித்தேன்
உன்னை நான்
தூக்க வந்தேன்
உன் தாய் கூறினாள்
பயந்தேன் அன்று
இன்று எனக்கோ
பக்குவம் வந்து
நானும் நனைந்தேன்
என் குழந்தையின் சிரிப்பில்

அ.பிரதீபா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## நண்பனின் நினைவுகள்

சிலர் அன்பை
வார்த்தைகளால் உணர்த்தலாம்
சிலர் அன்பை
உணர்வுகளால் உணர்த்தலாம்
ஆனால்
சிலர் அன்பு புரியாது

அதைக் காலம்
உணர்த்தும் போதுதான்
கண்கள் கலங்கும்
நான் தேடியதும்
உன்னைத் தான்
தேடுவதும் உன்னைத் தான்
இனி
தேடப் போவதும் உன்னைத் தான்
ஆனால்
தேடிய இடமெல்லாம் கிடைத்தது
உன்
நினைவுகள் மட்டும்
தான் நண்பா!

வெ.அரவிந்த்
இளங்கலை வேதியியல் முதலாமாண்டு

## தன்னம்பிக்கை

என்னைத் தேடி வரும்
துன்பத்திடம்
சிரித்துக் கொண்டே கேட்டேன்
யாருக்கும் என்னைப் பிடிக்காமல் போக
உனக்கு மட்டும்
என்னை எப்படி பிடித்தது...
அடிக்கடி சந்தித்துக் கொண்டே இருக்கிறாய்
என்று கேட்டேன்

நான் வரும் பொழுதெல்லாம்
சோர்ந்து விடாமல்
என்னை எதிர்த்து நின்றாயே
அந்த தைரியத்தை ரசிக்க
வந்தேன் என்றது....!!!

சி.சக்திவேல்
இளம் அறிவியல் முதலாமாண்டு கணினி அறிவியல்

## தமிழ்

தமிழ் என்னும் ஆதிமொழி
ஆயிரமாயிரம் ஆண்டுகளாக
வளர்ந்த மொழி.......
கணக்கிட முடியாத பதிவுகளால்
வரலாறான மொழி........
அறிஞர்கள் பலரும்
போற்றிப்
பாதுகாத்த மொழி......
இசைகளில் புகுந்து
வையம் பரவின மொழி......
நாகத்துறையில் நவரசம்
காட்டிய மொழி......
நூல்கள் பலவற்றால்
ஆராய்ச்சிகளை
பதிவிட்ட மொழி.......
விரும்பும் எவரையும் வசீகரிக்கும்

ஆற்றலுள்ள மொழி......

தாயன்போடு தரணி முழுவதும்

பரவிக்கிடக்கும் மொழி......

ஒரு அர்த்தத்திற்கு ஆயிரம் வார்த்தைகள்

ஒரு வார்த்தைக்கு ஆயிரம் அர்த்தங்கள்

சொல்லிக் கொடுக்கும் மொழி......

அதுவே

என் தாய்த்தமிழ் மொழி......

தமிழ் வாழ்க....

பா.ரூபன்

இளங்கலை வேதியியல் முதலாமாண்டு

## நண்பனே

கதை பேசிக் கொண்டே வா

காற்றோடு போவோம்

உரையாடல் தீர்ந்தாலும்

உன் மௌனம்

அது போதும்

நீ எழுதிய கடிதத்தின் வரிகள்

கடலாக

அதில் மிதந்தேனே நண்பனே

நானும் படகாக....

ப.அனிதா

இளங்கலை கணினிஅறிவியல் முதலாமாண்டு

## பிரிவு

அருகில் இருந்து பார்க்கும்
சுகத்தைவிட
பிரிவில் நினைத்துப்
பார்க்கும் சுகமே
நிலையான இன்பம்....!

ப.அனிதா
இளங்கலை கணினிஅறிவியல் முதலாமாண்டு

## அம்மா

அழகான
உணர்வான
ஒற்றைச்சொல் 'அம்மா'
அம்மா
பிறந்தவுடன் சொன்னதும்
உயிரை வலியோடு முடிக்கும் போது
சொல்வதும் அம்மா

செ.கவிப்பிரியா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## நிலா

இந்த உலகம் மறந்துபோனது
ஒற்றைப் பார்வையில்
பற்றி எரிகிறது தேகம்

ஒற்றை நிலவு

ஓராயிரம் விண்மீன்கள்

எல்லாம் கொட்டிக் கிடக்கிறது

விரல் தொட்ட

ஒற்றை வண்ணத்துப் பூச்சி

உன்னால் உலகமாகிப் போனது

ஒரு குவளையில்

ஊற்றி வைத்த மகிழ்ச்சியால்

இதயமெங்கும் நிரம்பி வழிகிறது

தெருவில் கடந்து செல்லும்

உடல்களில் எல்லாம்

உனது பிம்பங்கள்

உற்றுப் பார்த்து

ரசிக்க நினைக்கையில்

கலைந்து போகிறது

காட்சிப் பிழைகள்

மா.தினேஷ்

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## அம்மா

வார்த்தைகள் இல்லாமல்

பேசினேன்...

கண்கள் இல்லாமல்

ரசித்தேன்

காற்றே இல்லாமல்

சுவாசித்தேன்
கவலைகள் இல்லாமல்
வாழ்ந்தேன்
எங்கென்றால்
என் தாயின் கருவறையில் !
என் முகம் பார்க்கும் முன்பே,
என் குரல் கேட்கும் முன்பே,
என் குணம் அறியும் முன்பே,
என்னை நேசித்த ஓர் இதயம்…
என் தாய் மட்டும் தான்….

இரா.மௌலிதரன்
இளங்கலை வேதியியல் முதலாமாண்டு

## மழை

சில்லென்ற சாரல் காற்றில்
சிலிர்க்குதே மனசு!
மழையின் வருகையை
முன்னறிவிப்பு செய்கின்றன
கார்முகில் கூட்டங்கள்!
ஜன்னலைத் திறக்கும் போதிலே
முகத்தைத் தழுவி
இனிமையளிக்கிறது தென்றல்!
மழைத்துளி சிந்தும் சத்தம்
எத்தனையோ இசைக்கருவிகளை
எளிதில் வென்று

செவியை நிரப்புகிறது!

இனிய இனிய இன்பம்

அ.வசந்த்குமார்

இளங்கலை வேதியியல்

## நண்பன்

மாலையிலிருந்து உதிரும்

பூக்கள் தான்

உறவுகள்....

நிலையாக இருக்கும்

நார்கள் தான்

நண்பர்கள்....

வாசம் இல்லை

ஆனால்

எப்போதும்

பாசம் உண்டு!!!

கோ.கோகுல்ராஜ்

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## தீராத தீ

நேரடியாக

குகையிருட்டில்

மூங்கில் காட்டில்

வெடித்த சிக்கி முக்கித் தீயின்

வெளிச்சத்தைத் தரிசிக்க வில்லை
வெப்பத்தை ஸ்பரிசிக்க வில்லை
அதன் அணையாத யாத்திரையை
நம்புகிறேன் ஆனால்
அடுத்த யுகங்களின் குகைகளுக்கும்
வெளிச்சம் தரும்
வீரியம் உண்டு அதற்கு
தீயின்றித் தீராது உலகம்
தீயும் தீர்ந்து விடாது.

ம.ஹேமலதா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## நட்பு

காணும் கனவுகள்
பலவிதமாய்
பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு
கல்லூரி வாசலை
வந்தடைந்தேன்!
கலக்கமில்லாத மனத்தோடு
முதலாம் இருக்கையில்
நான் இருக்க
கடைசியில் இருந்த
என் தோழியே
நீதான் உயிரானாய்!
எப்படிப் பார்த்தோம்
எப்படிப் பழகினோம்

என்பது தெரியவில்லை!
நீ என்னில் பாதியானது மட்டும்
புலனாகிறது!
என் கண்களில்
கண்ணீர்த் துளி வருகையில்
உன் கண்கள் நனைந்தது!
உன்னைப் பற்றி எழுதுகையில்
பேனா மையும் கலங்கும்
என் கண்களுடன் சேர்ந்து......

ஈ.தாரணி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## விகடகவி தெனாலிராமன்

விகடகவி தெனாலி ராமனின் வேடிக்கையான கதைகளும் அவரின் சோகமான முடிவும்! பிறந்த சில நாட்களில் தந்தையை இழந்து அதன் பின் வறுமையில் உழன்று பின் மாமன் வீட்டில் வளர்ந்தவர். தெனாலிராமன் இளமையிலே படிப்பில் நாட்டம் இல்லாமல் இருந்தான். இருப்பினும் மற்றவரை சிரிக்கவைக்கும் ஆற்றலால், உடன் உள்ள சிறுவர்களை அவ்வப்போது தனது கோமாளித்தனங்களால் சிரிக்க வைப்பதில் சாமர்த்தியராக இருந்தார். அவை சேட்டைகளாக இருந்தாலும், அவற்றில் இருந்த அறிவுக்கூர்மையான விகடநுட்பம் எல்லோரையும் கவர்ந்தது. இவரின் நகைச்சுவையைக் கண்ட ஒரு துறவி, காதில் ஒரு மந்திரம் சொல்லி, இதை உச்சரித்துக் கொண்டே இரு. காளி தேவியின் வரம் கிடைக்கும் என்று கூற, அதன்படியே காளியின் தரிசனம்

கிடைக்கப்பெற்று, காளிதேவியையே தன் மதி நுட்பத்தால் சிரிக்க வைத்து, விகடகவி பட்டம் பெற்றதாக கதைகளில் அறிய முடிகிறது.

இப்படிப்பட்ட வரம் பெற்றதன் காரணமாக விஜயநகரை ஆண்டு வந்த கிருஷ்ணதேவராயர் அரண்மனையில் நுழைந்து மன்னரின் நம்பிக்கையைப் பெற்று அரசவைப் புலவராக, விகடகவியாக இருந்தார். அப்போது அரசவையில் அவர் நிகழ்த்திய நிகழ்வுகள் படிக்கப்படிக்க திகட்டாதவை. அவை அரசரை மனம் மகிழ சிரிக்க வைப்பதாகவும் சிந்திக்க வைத்த நீதி போதனைகளாகவும் இருந்தன. அவர் சொல்ல வந்த கருத்தை சிறு சம்பவங்கள் மூலம் சிரிக்க வைத்து, அதன் பின் எல்லோரும் பொருள் உணர்ந்து அவர் சொல்ல வந்ததை ஒப்புக்கொள்ளும் வகையில் அவருடைய புலமை இருந்தது.

மோ.மௌலீஸ்

இளங்கலை கணினிஅறிவியல் முதலாமாண்டு

## *படிப்புகள்*

| | | |
|---|---|---|
| சில்விகல்ச்சர் | - | காடு வளர்ப்பு பற்றிய படிப்பு |
| ஆர்போரிகல்ச்சர் | - | மரம் வளர்ப்பு |
| ஹார்டிகல்ச்சர் | - | தோட்டக்கலை |
| ஒலோகல்ச்சர் | - | தேனீ வளர்ப்பு |
| செரிகல்ச்சர் | - | பட்டுப்புழு வளர்ப்பு |
| புளோரிகல்ச்சர் | - | பூச்செடி வளர்ப்பு |
| பிஸ்கல்ச்சர் | - | மீன்கள் வளர்ப்பு |
| அக்வாகல்ச்சர் | - | நீர்வளர் உயிரினங்கள் படிப்பு |

| | | |
|---|---|---|
| எபிகிராபி | - | கல்வெட்டு பற்றிய படிப்பு |
| டெக்டைலோகிராபி | - | விரல் ரேகை புலனாய்வு படிப்பு |
| லெக்ஸிகோகிராபி | - | அகராதி எழுதும் கலை பற்றியது |
| கார்டோகிராபி | - | வரைபடம் தயாரிப்பது பற்றியது |
| கேலிகிராபி | - | சித்திர எழுத்துகள் பற்றிய படிப்பு |
| கிரிப்டோகிராபி | - | சங்கேத மொழி பற்றியது |
| ஆண்ட்ராலஜி | - | ஆண்களைப் பற்றிய மருத்துவம் |
| கைனகாலஜி | - | பெண்களைப் பற்றிய மருத்துவம் |

இரா.தீபா

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## *ஊரும் உற்பத்தியும்*

| | | |
|---|---|---|
| திண்டுக்கல் | - | பூட்டு, புகையிலை |
| நாமக்கல் | - | முட்டை |
| சிவகாசி | - | பட்டாசு |
| கோவில்பட்டி | - | தீப்பெட்டி |
| ஆரணி | - | பட்டு |
| காஞ்சிபுரம் | - | பட்டு |
| ஊத்துக்குளி | - | வெண்ணெய் |
| மதுரை | - | மல்லிகை |
| கும்பகோணம் | - | வெற்றிலை |
| திருப்பூர் | - | பனியன் |
| பவானி | - | ஜமுக்காளம் |
| சேலம் | - | மாம்பழம் |
| வேலூர் | - | முள்கத்திரிக்காய் |

| | | |
|---|---|---|
| சென்னிமலை | - | போர்வை |
| பத்தமடை | - | பாய் |
| பன்ருட்டி | - | பலாப்பழம் |
| திருச்செந்தூர் | - | சுக்கு, கருப்பட்டி |
| தஞ்சாவூர் | - | தலையாட்டி பொம்மை, தட்டு |

இரா.தீபா

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## *சிறுகதை – ஒரு கட்டெறும்பின் உலகம்*

ஒரு கிராமத்து சாலையில் பாழடைந்த மண்டபம் ஒன்று இருந்தது. அந்த மண்டபத்திற்கு எதிரே ஒரு வேலமரம். வேலமரத்தை ஒரு காட்டுக்கொடி பற்றிப் படர்ந்திருந்தது. அதிலிருந்து ஓர் இலை மட்டும் உதிராமல் பழுத்திருந்தது: எப்பொழுது கீழே விழலாம் என்று நேரத்தை எதிர் நோக்கி இருந்தது. அந்த மரத்தில் ஒரு பொந்து இருந்தது. பொந்துக்கு முன்னால் ஒரு மண் உருண்டை இருந்தது.

அந்தப் பொந்திலிருந்து ஒரு பெரிய கட்டெறும்பு வெளியே வந்தது. “இந்த உலகைப் பார்த்து பல நாள் ஆயிற்று” என்று சொல்லிக்கொண்டே சிங்கத்தைப் போன்று தன் தலையை இடம் வலமாய் திருப்பிப் பார்த்து எதிரே ஒரு சிற்றெறும்பு வந்தது. “என்னடா பயலே, சௌக்கியமா?” என்று கட்டெறும்பு கர்ஜிக்கும் குரலில் குசலம் பேசியது. அந்தக் குரலைக் கேட்டதும் நடுங்கி, வந்த வழியே திரும்பி ஓட்டம் பிடித்தது சிற்றெறும்பு. “உடம்பில்

பயம் இருக்கிறதா? பிழைத்துக் கொள்வாய், போ'' என்று கட்டெறும்பு தன்னைத் தானே வியந்து மீசையை நீவிக் கொண்டது.

கட்டெறும்பு உலகத்தைப் பார்க்கத் தலையை உயர்த்திப் பார்த்தது. ''இதென்ன குறுக்கே நின்று மறைக்கிறது! ஓ... இந்த மலையா?'' என்று முன்னால் வந்து, மண்ணுருண்டையின் மேல் இருகைகளையும் ஊன்றித் தலை நிமிர்ந்து பார்த்தது. மனிதர்கள் சந்தையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

''யாரது? மனிதப் பயல்களா? சுத்த சோம்பேறிகள்,'' என்றது கட்டெறும்பு. அதற்கு ஒரு சந்தேகம் எழுந்தது, உலகில் யார் அதிகம்? மனிதப் பயல்களா, எறும்புக் கூட்டமா என்று, விடை கிடைக்காமற் போகவே, அவர்களிடம் யாரையாவது கூப்பிட்டுக் கேட்போம் என்று நினைத்தது. கட்டெறும்பு தலையை நீட்டி இரு கைகளை உயர்த்திக்கொண்டு, கடுகு பிளந்தன்ன வாயைத் திறந்து, ''ஏ மனிதப் பயல்களா... உங்களுள் ஒருவன் இங்கே வாருங்கள்!'' என்று கர்ஜனை செய்தது. அவ்வளவுதான்! சாலையில் போய்க்கொண்டிருந்த மனிதர்கள் எல்லோரும் சிதறி ஓடினர். மண்டபத்திற்குள் ஒளிந்து கொண்டனர்.

அடெடே, என்னைக் கண்டால் உங்களுக்கு இவ்வளவு பயமா? அட கோழைப் பயல்களா!'' என்று கட்டெறும்பு கைகளைத் தட்டிக் கொண்டு மண்ணுருண்டையைச் சுற்றி சுற்றி வந்தது. ''என்ன இது! இந்த வெயில் காலத்தில் திடீர் மழைபெய்கிறதே!'' ''கோடை மழை, அப்படித்தான்'' மண்டபத்திற்குள் இவ்வாறு மனிதர்கள் பேசிக் கொண்டதை எறும்பு கேட்டது. 'மழையா' என்று வியப்புற்றது, எறும்பு.

“இது என்னடா, சுத்த பைத்தியங்கள்! மழையாமே! நானும் வெளியில்தான் நிற்கிறேன். வானம் என்னவோ இருண்டிருப்பது உண்மைதான், அதற்கு இவ்வாறு பயமா? பயந்தாங்கொள்ளிப் பயல்கள்! மழையாம் மழை” என்று கட்டெறும்பு சிரித்து குதித்தது.

இந்த ஜனங்களே இப்படித்தான், ஒன்றுமில்லாததற்கு எல்லாம் பிரமாதப்படுத்துவார்கள் என்று கட்டெறும்பு நினைத்தது. வானம் ஒளி விட்டுப் பிரகாசித்தது, மண்டபத்தில் ஒதுங்கியவர்கள் வெளியேறினார்கள்.

எறும்பின் ஏளனச் சிரிப்பை அவர்கள் கேட்கவில்லை, பூமியிலிருந்து ஆவி கிளம்பியது வெப்பம் தகித்தது. “உஸ்....என்ன புழுக்கம்” என்று ஒருவன் விசிறிக் கொண்டான். வேல மரத்தில் இருந்த பழுத்த இலையிலிருந்து நீர்த்துளிகள் சிந்தின, மண்ணுருண்டையின் மேல் விழுந்தது.

“ஐயோ...! பிரளயம்....! பிரளயம்....! வானம் இடிந்து விழுந்து விட்டது” என்று அது கதறியவாறு பழுத்த இலையை நீக்கியபோது மண்ணுருண்டை கரைந்திருப்பதை கண்டு அலறியது. “அட மனிதர்களே! பிழைத்து ஓடுங்கள், பிரளயம் வந்து விட்டது, ஓடுங்கள்” என்று சொல்லிக்கொண்டே, செய்வதறியாமல் முன்னும் பின்னும் ஓடியது.

“என்ன உஷ்ணம்” என்று சொல்லிக்கொண்டே ஒருவன் மர நிழலில் ஒதுங்கியனான். “அட பைத்தியங்களே! ஒன்றுமில்லாததற்கு அஞ்சி ஓடுகிறீர்கள். பேராபத்து விளைகின்ற போது முட்டாள் தனமாய் நடந்துகொள்கிறீர்களே! உங்களைப் பார்க்கவே வெட்கப்படுகிறேன். நான் என்னைக் காத்துக்கொள்ள வேண்டும்.

பிரளயம் வந்துவிடும்'' என்று கூறியவாறு தனது பொந்துக்குள் புகுந்துகொண்டது, கட்டெறும்பு.

ப.குமார்

இளம் அறிவியல் கணினிஅறிவியல் முதலாமாண்டு

## *பெரியாரின் பெண் விடுதலைச் சிந்தனைகள்*

**பெண்கல்வி**

பெண் முன்னேற்றத்திற்குப் பெருந்தடை வீட்டில் அவர்களை முடக்கி வைத்ததே. இது நாட்டு நடப்பை அறியவிடாமல் அவர்களின் அறிவை மறைக்கச் செய்வதாகும். நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய பெரிய மாறுதல்களைக் கொண்டுவர இயலா. அப்படி மாறுதல்கள் ஏற்பட்டாலும் அதனால் பயனொன்றும் விளையாது. பெண்கள் மனிதப் பிறவிகளாக நடமாட வேண்டுமானால், முதலில் அடுப்பங்கரையை விட்டு அவர்களை வெளியேற்ற வேண்டும்.

**பெண்ணுரிமை**

பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார். அதற்காக அவர் பெண்களை ஆயத்தப்படுத்திய முறையே தனியானது. ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று சிந்தித்தவர் பெரியார். பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல் மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக விளங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

**சொத்துரிமை**

பெரியார் பெண்ணுரிமை மறுப்புக்கான காரணங்களை நன்கு ஆராய்ந்தார். பெண்களுக்கு வழிவழி வரும் சொத்துரிமை மறுக்கப்பட்டமையே அவர்களின் அடிமை வாழ்வுக்கு அடிகோலியது என்று உணர்ந்தார். அதற்காக, அவர்கள் போராடவும் கிளர்ச்சி செய்யவும் வேண்டுமெனக் கூறினார். பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்து விட்டால் அவர்களுக்கு இருக்கும் எல்லா வகையான அடிமைத்தனங்களும் ஒழிந்து போகும். பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே முதன்மையான காரணம். அதனால், பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாத உடனடிச் செயலாகும் என்று பெரியார் தம் கட்டுரைகளில் எழுதியும் மேடைகளில் பேசியும் வந்தார். இன்று அச்சிந்தனை நடைமுறைக்கு வந்துள்ளது.

**அரசுப்பணி**

அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெற வேண்டும். அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும். “பெண்களுக்கு எல்லா வகையான உத்தியோகமும், கிடைக்கச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறோம்” என்று பெரியார் சிந்தித்ததனைத் தமிழக அரசு இன்று நடைமுறைப்படுத்தி வருகின்றது.

**குழந்தைத் திருமணம்**

சடங்குகளையும் மூட நம்பிக்கைகளையும் களைவதில் உறுதியான உள்ளம் படைத்தவராக இருந்தார் பெரியார். பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார். விடுதலைக்கு முன்னிருந்த பெருங் கொடுமைகளுள் குழந்தை மணமும் ஒன்று. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமா? இது சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த வேதனை விளையாட்டு எனக்கூறி அதனை நீக்கப் பாடுபட்டார்.

**மணக்கொடை மறுப்பும் கைம்மை ஒழிப்பும்**

தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே மணக்கொடை. பெற்றோர் பலர் தம் மகனின் கல்விக்காகப் பணம் செலவழிப்பதனைத் தங்கள் கடமையெனக் கருதாது, அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகவே கருதுகின்றனர். அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே அவனுக்கு வரப்போகின்ற மனைவி மூலம் மணக் கொடையாய்ப் பெற்றுவிட வேண்டுமென்று துடிக்கின்றனர். சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால் தான் இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும்.

தமிழ்நாட்டு இளைஞர்கள் மாணவர்கள் பட்டதாரிகள் ஆகியோர் செக்கு மாடுகளாக இல்லாமல், பந்தயக் குதிரைகளாக மாறவேண்டும். தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம் நம் இளைஞர்களிடையே வளரவேண்டும் என்று பெரியார் உரைத்தார். கணவனை இழந்தோர் மறுமணம் செய்து கொள்வதில் தீங்கில்லை என்றும் தெரிவித்தார்.

“தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்”

இ.ராஜேஷ்
இளம் அறிவியல் வேதியியல் முதலாமாண்டு

## *பொது அறிவு*

1. போக்குவரத்து காவலர்களே இல்லாத நாடு எது?
   விடை: சிலோன் கெஜட்
2. சீனாவின் புனித விலங்கு எது?
   விடை: பன்றி
3. கிரிக்கெட் மட்டை எந்த மரத்தால் தயாரிக்கப்படுகிறது?
   விடை: வில்லோ மரம்
4. பேருந்து போக்குவரத்து முதலில் எந்த நாட்டில் தொடங்கப்பட்டது?
   விடை: பிரான்ஸ் - 1819
5. உஸ்தாத் சுல்தான் கான் இசைக்கும் இசைக்கருவி எது?
   விடை: சாரங்கி
6. பள்ளிக்கூடத்தை முதன் முதலில் உருவாக்கியவர்கள் யார்?
   விடை: ரோமானியர்கள்
7. முகப்பவுடரை கண்டுபிடித்த நாடு எது?
   விடை: இத்தாலி
8. விவசாயம் முதலில் எங்கு தொடங்கப்பட்டது?
   விடை: தாய்லாந்து

9. தென்னாட்டு காந்தி என்று அழைக்கப்படுவர் யார்?

விடை: அண்ணாதுரை

10. மேட்டூர் அணையை வடிவமைத்த சிற்பி யார்?

விடை: W.M. எல்லீஸ்

வெங்டேசன்

இளங்கலை முதலாமாண்டு ஆங்கிலம்

## *பொது அறிவு*

1.கல்லில் வடித்த காவியம் என்று அழைக்கப்படுவது எது?

விடை: மோதி மசூதி

2. மனிதனை ஒருமுறை தாக்கிய பிறகு மீண்டும் தாக்காத நோய் எது?

விடை: பெரிய அம்மை

3.“அறிவியல் சோசியலிசத்தின் தந்தை” எனப்படுபவர் யார்?

விடை: கார்ல் மார்க்ஸ்

4. இந்தியாவில் தேசிய நூலகம் அமைந்துள்ள இடம் எது?

விடை: கொல்கத்தா

5. இந்தியாவின் முதல் கலைக்களஞ்சியம் எந்த மொழியில் வெளிவந்தது?

விடை: வங்காள மொழி

6. மிக அதிக கல்வெட்டுகளை பாதுகாத்து வரும் இந்திய நகரம் எது?

விடை:மைசூர்

7. உலகில் உள்ள மொத்த வண்ணங்களில் பெயரிடப்பட்டவை எத்தனை?

விடை: 267

8. இந்தியாவில் அதிக பத்திரிக்கைகள் வெளிவரும் மொழி எது?

விடை: இந்தி

9. சர்வதேச அணுசக்தி கழகத்தின் தலைமையிடம் எங்கு உள்ளது?

விடை: வியன்னா

10. உலகிலேயே மிகப்பெரிய நூலகம் எங்குள்ளது?

விடை: மாஸ்கோ

ரா.ரம்யா,

முதலாண்டு கணினி பயன்பாட்டியல், 'அ' பிரிவு

## பொது அறிவு

1. தக்காளியின் தாயகம் எது?

விடை :அயர்லாந்து

2. குறிஞ்சி மலரில் மட்டும் எத்தனை வகை உள்ளன?

விடை: 2000

3. ஆப்பிள் பழத்தின் தாயகம் எது?

விடை: கசகிஸ்தான்

4. தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று கூறியவர்?

விடை: ஜகதீஸ் சந்திர போஸ்

5. மண் இல்லாமல் தாவரங்களை வளர்க்கும் முறை எது

விடை: ஹைட்ரிபோனிக்ஸ்

6. திராட்சையின் தாயகம் எது?

விடை : ஆப்கானிஸ்தான்

7. ஐயர்லாந்து மக்களின் முக்கிய உணவு எது?

விடை : உருளைக்கிழங்கு

8. குங்குமப்பூவின் தாயகம் எது?

விடை : பாரசீகம்

9. எள்ளின் தாயகம் எது?

விடை : தென்னாப்பிரிக்கா

10. பன்றியின் கர்ப்பகாலம் எது?

விடை : 16 வாரங்கள்

11. முட்டையிட்டு பால் தரும் விலங்கு எது?

விடை : பிளாட்டிபஸ்

12. யானையைப் போன்ற தந்தம் கொண்ட விலங்கு எது?

விடை : வால்ராஸ்

13. உலகின் மிகப்பெரிய பாலூட்டி எது?

விடை :திமிங்கலம்

14. உலகில் எத்தனை வகையான திமிங்கலம் உள்ளன?

விடை :100

சே.வினிதா

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## கவிதைகள்

### கிழிந்து போச்சோ

இறகைச் சிலுப்பும்
காக்கையை
எச்சில் இலையைத் தின்றபடி
யோசனை செய்யும்
பசு மாட்டை
நனைந்த குரலில்

பூ விற்று நடந்து போகும்
சிறுபெண்ணை
ஓட்டல் புகையை
ரோட்டின் மேல் பெட்ரோல்
சிதறிய கோலத்தை
பாராமல்
ஏன் அவன் மட்டும்
பரிசுச்சீட்டை விலைசொல்லிக்
கூவுகிறான்?
என் கக்கத்துக்
குடையைப் போலப்
பெரிதாகக் கிழிந்து போச்சோ
அவன் வாழ்க்கை?

தொகுப்பு
சு.வினிதா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## *மரங்களைப் பாடுவேன்*

உண்ணக் கனி
ஒதுங்க நிழல்
உடலுக்கு மருந்து
உணர்வுக்கு விருந்து
அடையக் குடில்
அடைக்கக் கதவு
அழகு வேலி
ஆடத் தூளி

தடவத் தைலம்
தாளிக்க எண்ணெய்
எழுதக் காதிதம்
எரிக்க விறகு
மரம்தான் மரம்தான்
எல்லாம் மரம்தான்......!
மறந்தான் மறந்தான்
மனிதன் மறந்தான்......!

தொகுப்பு
அ.கோகிலா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## ஒரு கருநீலப் பூ

ஒரு கருநீலப் பூ...
எட்டின மட்டும்
ஆளரவமற்ற கடற்கரை
கால் நனைக்கக்
கூப்பிடுகிற அலையைத்
தீர்மானமாகப் புறக்கணித்துச்
சிரித்திருந்தேன்
முட்பூண்டுகள் பூத்துக் கிடக்கிற
மணல் வெளியில்
இன்னொரு பாதையில்
அறைந்து கொண்டிருந்தது...
தன்னை கவனிப்பாரற்ற

வெவ்வேறு அலைகளின்
நுரைகள் அப்பி
நகர்ந்து கொண்டிருந்தன
படகுகள் வெகுதூரத்தில்...
விளிம்பில் கடல் ஒதுக்கிய
சிப்பியை விடவும்
இறகு நனைத்து
சிலுப்பிக் கொள்ளும்
காகங்கள் அழகாகி விடுகிற
நொடியின் பரவசத்தில்
பக்கவாட்டில் துளாவின
என் கையால்
பிடுங்கப்பட்டிருந்தது
சின்னஞ் சிறியதாக
ஒரு கருநீலப் பூ

ரா.மோகனஜோதி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

